## நாடாளுமன்றத்தில்

# ஆளும் தரப்புக்கு ஆதரவாக - மாநிலங்களவைத் தலைவர் செயல்படுகிறார்!

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு! தகுதி நீக்கத் தீர்மானம் கொண்டுவர ஆலோசனை!

புதுடெல்லி, ஆக.11-

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்புக்கு ஆதரவாக மாநிலங்களவை தலைவரும், துணை குடியரசுத் தலைவருமான ஜெக்தீப் தன்கர் செயல்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசிய பா.ஜ.க. எம்.பி., கான்சியாம் திவாரி, எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குறித்து அவதூறாகப் பேசினார். இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால், பா.ஜ.க. எம்.பி., மன்னிப்பு கோர அவசியம் இல்லை என்று அவைத்தலைவர் ஜெக்தீப் தன்கர் கூறினார். இதனால், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர். முன்னதாக பேசிய மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவர் திருச்சி சிவா, ஆளும் கட்சிக்கு வழங்கும் அதே வாய்ப்பு எதிர்க்கட்சிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். சில பிரச்சினைகள் வரும்போது சுமுகமாகத் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய சமாஜ்வாதி கட்சி எம்.பி., ஜெயா பச்சன், அவைத்தலைவர் ஜெக்தீப் தன்கர், எப்போதும் எதிர்க்கட்சிகளிடம் கடுமையாக நடந்து கொள்வதாகக் குற்றம்சாட்டினார்.

பின்னர், பிற்பகல் முழுவதும் அவையை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. 2 மணிக்குத் தொடங்கிய மாநிலங்களவை அடுத்தடுத்து மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் 3.30 மணிக்கு அவை தொடங்கிய போது அனைத்து எதிர்க்கட்சிகளும் அவையில் கலந்து கொள்ள வேண்டும் என்று அவைத்தலைவர் ஜெகதீப் தன்கர் வேண்டுகோள் விடுத்தார்.

அதன்பின்னர், அவை கூடியபோது, மாநிலங்களவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார்.

இதனிடையே, ஜெகதீப் தன்கருக்கு எதிராக அரசியல் சாசனப் பிரிவு 67ன் படி, தகுதி நீக்கம் செய்வதற்கான இம்பீச்மென்ட் கொண்டு வர எதிர்க்கட்சிகள் ஆலோசனை நடத்தி வருகின்றன.

# நீதியரசர்கள் பார்வைக்கு!

**“விசாரணை முடியும் என்ற நம்பிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவரை நீண்ட காலம் சிறையில் வைத்திருப்பது, குற்றம் சாட்டப்பட்டவரின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும்.”**

**- உச்சநீதிமன்றம்**

### காலை 7 மணி முதல் 8:45 மணிக்குள் 79 தொகுதிகளில் 4.60 கோடி வாக்குகள் பதிவான அதிசயம்!

# தேர்தல் ஆணையத்தின் மீது சந்தேகம்!

### குடியரசுத் தலைவருக்கு லட்சக்கணக்கான தபால்களை அனுப்ப நிர்மலா சீதாராமன் கணவர் - பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 11-

“லோக்சபா தேர்தல் தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டு, ஜனாதிபதிக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் லட்சகணக்கான தபால் கார்டு. களை அனுப்ப வேண்டும், என்று ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரும், பொருளாதார நிபுணருமான பரகலா பிரபாகர் பேசினார்.

‘வாய்ஸ் ஆப் தமிழ் நாடு’ என்ற அமைப்பின் சார்பில், சென்னையில் **‘2024: திருடப்பட்ட தீர்ப்பு’** என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

இதில், பரகலா பிரபாகர் பேசியதாவது:-

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில், மொத்தம் பதிவான ஓட்டுகளை தேர்தல் ஆணையம் அறிவிக்கவில்லை; சதவீதமாக தான் வெளியிட்டது. ஓட்டு எண்ணிக்கை முடிந்த பின், 11 நாட்கள் கழித்தே அதன் விபரங்களை வெளியிட்டது. இரண்டாம் கட்டமாக நடந்த தேர்தலில், பதிவான ஓட்டு விபரங்கள் தற்போது வரை இல்லை.

**2 முதல்வர்கள் கைது!**

தேர்தலுக்கு முன் சிறப்பாக பிரசாரம் செய்யக் கூடிய இரண்டு முதல்வர்களை கைது செய்தனர். பிரதான எதிர்க்கட்சியின் வங்கி கணக்கு முடக்கப்பட்டது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்த பின், தேர்தல் நியாயமாக நடப்பதாக தேர்தல் ஆணையம் சொல்கிறது. ஓட்டுப்பதிவு நடந்த அன்று காலை 7:00 முதல் 8:45 மணிக்குள், குறிப்பிட்ட 79 தொகுதிகளில், 4.60 கோடி ஓட்டுகள் பதிவான அதிசயம், இந்த தேர்தலில் நடந்தது. அந்த தொகுதிகள் தான் பா.ஜ., வெற்றிக்கு சாதகமாக அமைந்துள்ளன.



இத்தனைக்கும் பின், தேர்தல் ஆணையம் சுதந்திரமாக, தன்னிச்சையாக செயல்படுகிறது என்று கூறும்போது தான் சந்தேகம் வருகிறது. தமிழகத்தில் ஒரே கட்டமாக, 39 தொகுதிகளில் தேர்தல் நடந்ததில், பா.ஜ., ஓட்டு சதவீதத்தை அதிகரித்துள்ளனர். ஆனால், வெற்றி பெறவில்லை. தமிழகத்தை விட குறைந்த தொகுதிகள் உடைய ராஜஸ்தான், கர்நாடகா, ம.பி., ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில், இரண்டு கட்டம், நான்கு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இது ஏன் என்பது தான் கேள்வி.

**தேர்தல் கமிஷன் விளக்க வேண்டும்!**

தொகுதிகள் குறைந்த இடங்களை உடைய மாநிலங்களில், பல கட்டங்களாக தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் என்ன என்பதை தேர்தல் கமிஷன் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும். இரண்டாம் கட்ட தேர்தலில், 88 தொகுதிகளுக்கு இதில், பதிவான ஓட்டு ஓட்டுப்பதிவு நடந்தது. விபரங்களை, தற்போது வரை வெளியிடவில்லை.

**தபால் கார்டுகளை ஜனாதிபதிக்கு அனுப்புங்கள்!**

ஆனால், இரண்டாம் கட்டத்தில் நடந்த தேர்தலில்தான், அதிக தொகுதிகளில் பா.ஜ., வெற்றி பெற்றுள்ளது. இதுதான் கட்சிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இதுகுறித்து அரசியல் கட்சிகள் குரல் எழுப்ப வேண்டும். இந்த மாதிரியான தேர்தல் சந்தேகம் குறித்த கேள்விகளுக்கு விளக்கம் கேட்டு, லட்சக்கணக்கான தபால் கார்டுகளை ஜனாதிபதிக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும். தபால் கார்டுகளின் மூட்டைகளால், ஜனாதிபதி மாளிகை நிரம்பி வழிய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதே கருத்தை மையப்படுத்தி, கடந்த ஆக., 8ம் தேதி வெளியான முரசொலி பத்திரிகையில், ‘திருத்தப்பட்ட வெற்றி’ என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிடப்பட்டிருந்தது.

## அ.தி.மு.க. ஆட்சியில்

# பேராசிரியர்கள் நியமனத்தில் முறைகேடு!

### விசாரணை நடத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஆக. 11 -

பேராசிரியர்கள் நியமனத்தில் முறைகேடு நடந்துள்ளதாக 2018ம் ஆண்டு அளித்த புகார் மீது விசாரணை நடத்த சென்னை பல்கலைக்கழகத்துக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக மானியக் குழு விதிகளை மீறி, பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த முறைகேடுகள் குறித்து விசாரிக்க குழு அமைக்க, பல்கலைக்கழகத்துக்கு அதிகாரம் வழங்கி, 2018ம் ஆண்டு சிண்டிகேட் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தின் அடிப்படையில் விசாரணைக் குழுவை அமைக்கக் கோரி சையது ரஹமத்துல்லா என்பவர் 2018ம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு மனு அளித்துள்ளார். அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் 2019ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தொடர்பாக சென்னை பல்கலைக்கழக பதிவாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், பல்கலைக்கழகத்தில் 22 பேராசிரியர்கள் நியமனம் முடிவடைந்து விட்டதாகவும், இந்த நியமனங்களில் முறைகேடுகள் நடந்துள்ளதாக விண்ணப்பதாரர் எவரும் எந்த புகாரும் அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் மற்றும் நீதிபதி பி.பி.பாலாஜி அமர்வு, மனுதாரரின் புகார் இதுநாள் வரை பரிசீலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி, 2018ம் ஆண்டு அளிக்கப்பட்ட அந்த புகார் மனு மீது விசாரணை நடத்த சென்னை பல்கலைக்கழகத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த விசாரணையில் பேராசிரியர்கள் நியமனத்தில் முறைகேடுகள் நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டால், உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும், இந்த நடைமுறையை ஆறு மாதங்களில் முடிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்தனர்.

### தமிழர் நலன் காக்க, தமிழ்நாடு உரிமை காக்க முதல்வர் கொண்டு வரும் திட்டங்களெல்லாம்

# முதல்வருக்கு காவல் அரணாக அணிவகுத்து நிற்கின்றன!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக. 11 -

தமிழர் நலன் காக்க தமிழ்நாடு உரிமை காக்க முதல்வர் கொண்டுவரும் திட்டங்கள் எல்லாம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காவல் அரணாக அணிவகுத்து நிற்கின்றன என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு :-

மாணவ, மாணவிகளின் கல்விக்கு எந்த தடையும் வரக்கூடாது. அப்படி தடை வந்தால் அதை உடைத்தெறியவேண்டும். அதற்கு உதவிகள் செய்ய நான் தயார்” என்ற சூளுரையோடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து செயல்படுத்தி வரும் திட்டங்கள் மூலம், ஒட்டு மொத்த மாணவர் சமுதாய மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் பசியோடு பள்ளிக்கு வரக்கூடாது, பசியால் படிப்பு தடைபடக்கூடாது என்ற உயரிய நோக்கத்தில், பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை முதல்வர் கொண்டு வந்தார். தமிழ்நாடு முழுவதும் 30,992 தொடக்கப்பள்ளிகளில் அமலில் உள்ள இந்த திட்டம்




மூலம் 18 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பசியாறி வருகின்றனர். 3,995 அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் இத்திட்டம் மூலம் 2,23,536 குழந்தைகள் பசியாறி வருகின்றனர். ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 28 லட்சம் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் வேலை வாய்ப்புக்கு தயார்படுத்தப்பட்டுள்ளனர். ஒன்றிய அரசின் குடிமைப்பணி தேர்வுகளில், தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு, அவர்கள் முதல் நிலை தேர்வுக்கு தயாராக மாதம்தோறும் 7,500 ரூபாய் மற்றும் முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு ரூ.25 ஆயிரம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணையம், ரயில்வே மற்றும் வங்கிப் பணி தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிகம் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன், 1000 மாணவர்களுக்கு சென்னை, கோவை, மதுரை மண்டலங்களில் உண்டு உறைவிட வசதியுடன்கூடிய தரமான 6 மாத கால பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அரசு பள்ளியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்த மாணவிகள் கல்லூரிகளில் சேர்ந்தால் அவர்களுக்கு ‘புதுமைப்பெண்’ திட்டத் தின் கீழ் மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் 3 லட்சத்து 28 ஆயிரம் மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

மாணவிகளுக்கு மட்டும் தான் திட்டமா, உங்களுக்கும்தான் என்று தற்போது மாணவர்களையும் கல்வியில் ஊக்குவிக்கும் வகையில் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தை முதல்வர் அறிவித்து, அதை கோவையில் நேற்று தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் 3 லட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.

மாணவ, மாணவிகளுக்கு ஒரு தந்தையாக, அவர்களது குடும்பத்தில் ஒருவனாக முதல்வர் இருந்து வருகிறார். அந்த வகையில்தான் இந்த தமிழ்ப் புதல்வன் திட்டம் அமைந்துள்ளது. “இந்த திட்டம் மூலம் நீங்கள் அடையும் வளர்ச்சியை, நான் அடுத்தடுத்த ஆண்டுகளில் கவனமாக கண்காணிப்பேன்” என அவர் கூறி யுள்ளார். இதன்மூலம் மாணவ, மாணவிகள் நலனில் அவர் எடுத்துக்கொள்ளும் அக்கறை புலப்படுகிறது.

பசியை நீக்குவதோடு, கல்வியில் மாணவர்களை மேம்படுத்தி வேலை வாய்ப்பு உருவாக்கி தருவதில் இந்தியாவில் வேறு எந்த மாநில முதல்வரும் செய்யாததை தமிழ்நாடு முதல்வர் செய்து வருகிறார். அதனால் தான் அவர் நம்பர் 1 முதல்வர் என போற்றப்படுகிறார். ஒன்றிய பா.ஜ. அரசின் நிதி பகிர்வில் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டாலும், திறமையான நிதி மேலாண்மை காரணமாக திட்டங்களை கொண்டுவந்து, எதிர்க்கட்சியினரை வாய் பிளக்க வைத்துள்ளார். தமிழர் நலன் காக்க, தமிழ்நாடு உரிமை காக்க, முதல்வர் கொண்டு வரும் திட்டங்கள் எல்லாம் அவருக்கு காவல் அரணாக அணிவகுத்து நிற்கின்றன.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

## ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தினையொட்டி

# பல்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் கள ஆய்வு!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் மேற்கொண்டார்!

கோவை, ஆக.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டும் விதமாக தமிழ்ப் புதல்வன் திட்டத்தை கோவை அரசுக் கலைக் கல்லூரியில் தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்களோடு இணைந்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் பங்கேற்றார்.

இந்நிகழ்வு முடிந்த உடனே மாணவச் செல்வங்களைச் சந்திப்பதற்காக விரைந்தார் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

கோவையில் இருந்து மடத்துக்குளம் விரைந்த அமைச்சர் அவர்கள் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களைச் சந்தித்து ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் குறித்து எடுத்துரைத்தார்.

தொடர்ந்து அதே பள்ளியில் 234/77 ஆய்வையும் விரிவாக மேற்கொண்டார். பிறகு உடுமலைப்பேட்டை குடிமங்களம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கும் விரைந்தார் அமைச்சர் அவர்கள், அங்கும் மாணவர்களைச் சந்தித்து ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் குறித்து விளக்கமளித்தார்.

‘அனைத்து மாணவர்களும் உயர்கல்விப் பயில வேண்டும். அப்போதுதான் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் வெற்றி பெறும்.

முதலமைச்சர் அவர்களின் கனவு நனவாகும்’ என எடுத்துரைத்தார். தொடர்ந்து தாராபுரம் நாரணாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும் விரிவான ஆய்வு மேற்கொண்டார். அங்கு கட்டப்பட்டு வரும் பள்ளி கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.

இறுதியாக கரூர் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வளாகத்திலும் திடீர் ஆய்வு மேற்கொண்டார் அமைச்சர் அவர்கள். அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து “கோப்புகள் தேக்கமடையாமல் உடனே நடவடிக்கை எடுக்குமாறு” கேட்டுக்கொண்டார். கல்வி அதிகாரிகள் தெரிவித்த கோரிக்கைகளைக் கேட்டுக்கொண்ட அமைச்சர் ‘விரைந்து கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்’ எனவும் உறுதியளித்தார். கரூர் சட்டமன்றத் தொகுதியோடு சேர்த்து இதுவரை 160 சட்டமன்றத் தொகுதிகளுக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளார்.



சிவகங்கை மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி காந்தி நகரில் முதல்வரின் ஆணையின்படி பசுமை காடுகள் திட்டத்தின் கீழ் குறுங்காடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் மரம் நடும் திட்டத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், சிவகங்கை ஒன்றியக்குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலசந்தர், ஊராட்சி மன்ற தலைவர்கள் சிவதாஸ், கே.எஸ்.எம்.மணி முத்து,திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் இருந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து காணொலி வாயிலாக மதுரை மாவட்டம் வரிச்சியூர் பாத்திமா மைக்கேல் பொறியியல் கல்லூரியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உயர் கல்வி பயிலும் அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி ( தமிழ்வழி ) மாணவர்களுக்கு மாதம்தோறும் ரூ.1000 பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மணிமேகலை ராஜேந்திரன், கல்லூரி தாளாளர் ஸ்டாலின் ஆரோக்கியராஜ், கழக நிர்வாகிகள் அ.பா.ரகுபதி, ஹக்கீம், வடிவேல்முருகன், வழக்கறிஞர் கலாநிதி, மருதுபாண்டியன், இளங்கோவன், சீமான் மற்றும் அதிகாரிகள், மாணவர்கள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் ஆகியோர் உள்ளனர்.